பகுதி மக்களுக்கே குறைந்த விலையில் கிடைக்கும் அளவு ஒரு சூழ்நிலையை உண்டாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் அந்தப் பகுதியிலே அந்த மீன்கள் கிடைப்பதற்கான வகையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சாத்தனூரில் இருந்து பிடிக்கப்படுகிற மீன்கள் வேறு மாநிலங்களுக்கு வருவாய் காரணமாக் கொண்டு செல்லப்படுகிறது என்று சொன்னார்கள். தனியாகத்தான் அதை ஆராய வேண்டும்.

கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம்.

*கேள்வி எண் 796—**திரு. மு. அரங்கநாதன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளர் (பொதுப்பணித் துறை) அவர்களிடம் இருந்து வரைபடம் மற்றும் மதிப்பீடு பெற்று பின்னர், அரசின் அனுமதியுடன் விரைவில் கட்டப்படும்.

திரு. மு. அரங்கநாதன் : கோத்தகிரியில் தாலுகா அலுவலகக் கட்டடம் கட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டு விழா நடப்பதாக இருந்ததே, ஏன் அந்த அடிக்கல் நாட்டு விழா நடக்கவில்லை? என்ன காரணத்தால் அது நிறுத்தி வைக்கப் பட்டது ஏன் அந்த விழா நடக்கவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அடிக்கல் நாட்டு விழா நடத்திவிட்டு, அடிக்கல் நாட்டிவிட்டு ஆண்டுகள் பல ஆன பிறகும்கூட கட்டமுடியாத நிலை ஏற்படாதிருப்பதற்காகத்தான் கட்டுகிற நேரத்தில் அடிக்கல் நாட்டப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. அரங்கநாதன் : கோத்தகிரி பகுதியில் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தாலுகா அலுவலகம் சிறிய ஒரு அறையில்தான் நடக்கிறது. தாலுகா அலுவலகத்திற்கு வருகிற மக்கள் காற்றிலும் மழையிலும் வெளியே நிற்க வேண்டியிருப்பதால் அதன் அவசர அவசியத்தைக்கருதி உடனடியாக அந்தத் தாலுகா அலுவலகக்கட்டடம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்களை அழைத்து விரைவில் அடிக்கல் நாட்டி கட்டடமும் கட்டப்படும்.

கரும்பின் மீதான கொள்முதல் வரி.

*வினா எண். 797—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பின் மீது கொள்முதல் வரியாக(பர்சேஸ் டாக்ஸ்) மில்களிடமிருந்து அரசு டன் ஒன்றுக்கு எவ்வளவு வசூல் செய்கின்றது ?

(ஆ) இந்தக் கொள்முதல் வரியைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கரும்பின் மீது கடைசி கொள்முதல் விலையின் பேரில் 12 சதவீத கொள்முதல் வரி விதிக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 12 சதவீதம் பர்சேஸ் டாக்ஸ் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் சில மில்களிடமிருந்து 23 சதவீதம் கூட வசூலிக்கப்படுகிறது என்று சொல்வது உண்மைதானா ? அநேகமாக பல மாநிலங்களில் 10 சதவீதத்திற்கு மேல் இந்த வரி வசூல் இல்லை, சில இடங்களில் இந்த 10 சதவீதத்துக்குக் கீழேகூட வசூலிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே நம் மாநிலத்திலும் இதை 10 சத